நல்லூர் கிளை நூலகம்
மாநகரசபை மன்றம்
யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 04 திங்கட்கிழமை (18.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 181

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## எறிகணைத் தாக்குதலில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதி மீது படையினர் நடத்திய செறிவான எறிகணைத் தாக்குதலில் உடல் சிதறி ஒருவர் பலியாகி உள்ளார். நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வடமராட்சி கிழக்கின் மீது படையினர் செறிவான எறிகணைத் தாக்குதலை நடத்தினர். வத்திராயன் பகுதியில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் அப்பகுதியில் தொழில் நிமித்தம் வாழ்ந்து வந்த ஆசிர்வாதம் தவம் (வயது 38) என்பவர் கொல்லப்பட்டுள்ளார்.

(ச–5)

## விமான நிலையத்தை இரவில் திறக்க முடிபு

(கொழும்பு)

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச விமான நிலையம் இரவு நேரங்களில் மீண்டும் திறக்கப்பட உள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழீழ வான் படையின் விமானத் தாக்குதலைத் தொடர்ந்து பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச விமான நிலையம் இரவு நேரங்களில் மூடப்பட்டது.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் வான் தாக்குதல்களை எதிர்கொள்ளும் (06 ஆம் பக்கம் பார்க்க)

## ஆளில்லாத உளவு விமானங்கள் இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு

(கொழும்பு)

இஸ்ரேலிடம் இருந்து நவீன புளூ ஹெறிசோன்–2 எனப்படும் ஆளில்லாத உளவு விமானங்களை கொள்வனவு செய்வதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இந்த விமானத் தொகுதிகளை இலங்கை அரசு பரிசோதனைகளை மேற்கொள்ளாது. வேறு விநியோகஸ்தரிடம் இருந்து கேள்விப்பத்திரங்களை கோராது கொள்வனவு செய்ய முடி (06 ஆம் பக்கம் பார்க்க )

# அமைதி முயற்சியில் நடுநிலையாளராக செயற்பட ரொனி பிளேயருக்கு விருப்பம்



### ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் விபரிப்பு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான அமைதி முயற்சிகளுக்கு தான் நடுநிலையாளராக செயற்படவிருப்பம் கொண்டுள்ளதாக பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் தெரிவித்துள்ளார்.

தனது பதவிக்காலம் முடிபுற்றதும் இவ் உதவியினை புரிய ஆவலாக உள்ளதாக அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எழுதிய கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். (06 ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டுத் தாக்குதலில் அதிரடிப்படை அதிகாரி பலி

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் காஞ்சிரங்குடா பிரதேசத்தில் நேற்று முற்பகல் வேளையில் இடம் பெற்ற கைக்குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் விசேட அதிரடிப்படையின் உப பரிசோதகர் பலியாகியுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்றுள்ளது. இச் சம்பவத்தில் அதிரடிப்படையின் உப பரிசோதகர் டபிள்யூ.ஏ.விஜயசிங்க (வயது 35) என்பவரே பலியானவராவார்.

அம்பாறை (06 ஆம் பக்கம் பார்க்க )

## தமிழக மீனவர்களின் படகுகள் மீது இலங்கை மீனவர்கள் குண்டுத் தாக்குதல்

(ராமேஸ்வரம்)

தமிழக மீனவர் படகு மீது வெடிகுண்டு வீசி நடுக்கடலில் மூழ்கடித்த இலங்கை மீனவர்கள் மூன்று படகுகளையும் அதில் இருந்த மீனவர்களை கடத்திச் சென்றுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன. மேலும் தெரிய

பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு பேசாலைக்கும் இரணை தீவுக்கும் இடையில் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு படகில் வந்த இலங்கை மீனவர்கள் தமிழக மீனவர்களின் படகுகள்

என்பவரின் படகு தீப்பிடித்து கடலில் மூழ்கியது. பின்னர் இலங்கை மீனவர்கள் அப் பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மூன்று படகுகளையும் அதில் இருந்த மீனவர்களையும் கடத்திச் சென்றனர்.

## வலிகாமம் மேற்கில் ஆயுதங்கள் மீட்பு

வலிகாமம் மேற்குப் பகுதியில் இராணுவத்தினர் நேற்று நடாத்திய தேடுதலின்போது தற்கொலைத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் பற்றரிகள் மற்றும் மூன்று துப்பாக்கிகளையும் கைப்பற்றியுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களிடம் இருந்து கிடைத்த தகவலையடுத்தே இத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அவ் ஆயுதங்

தமிழக மீனவர் படகு மீது வெடிகுண்டு வீசி நடுக்கடலில் மூழ்கடித்த இலங்கை மீனவர்கள் மூன்று படகுகளையும் அதில் இருந்த மீனவர்களை கடத்திச் சென்றுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன.மேலும் தெரியவருவதாவது;

ராமேஸ்வரத்திலிருந்து 600க்கும் மேற்

மீன்பிடிக்க சென்றனர். நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு பேசாலைக்கும் இரணை தீவுக்கும் இடையில் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு படகில் வந்த இலங்கை மீனவர்கள் தமிழக மீனவர்களின் படகுகள் மீது வெடிகுண்டுகளை வீசினர்.

இதில் தங்கச்சிமடம் மீனவர் இருதயம்

... படகு ... கடலில் மூழ்கியது. பின்னர் இலங்கை மீனவர்கள் அப் பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மூன்று படகுகளையும் அதில் இருந்த மீனவர்களையும் கடத்திச் சென்றனர்.

மூழ்கிய படகிலிருந்த மீனவர்கள் நீண்ட நேரம் நடுக்கடலில் தத்தளித்தனர். அவர்களை மற்ற (06 ஆம் பக்கம் பார்க்க)

கைப்பற்றியுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களிடம் இருந்து கிடைத்த தகவலையடுத்தே இத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அவ் ஆயுதங்கள் கோவில் ஒன்றின் பின் பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டதாகவும் ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது. (சு)

# 20 அமைச்சர்கள் விரைவில் எதிர்க்கட்சி வரிசையில்?

(கொழும்பு)

அமைச்சரவை அமைச்சர்கள் 20க்கும் மேற்பட்டோர் விரைவில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமரவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் அண்மைக்கால செயற்பாடுகள் குறித்து கடும் அதிருப்தியில் இருக்கின்ற சில மூத்த அமைச்சர்கள் இவ்வாறு விரைவில் எதிர்க்கட்சி வரிசையில் அமரவுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை அரசாங்கத்தின் தூரநோக்கற்ற செயற்பாடுகள் தொடர்ந்தால் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துவிடுவோம் என்று சில அமைச்சர்கள் அரசாங்க தலைமையிடம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முக்கியமாக கொழும்பிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்ற மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பாக அரசாங்க மட்டத்தில் முரண்பட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டமை குறித்தும் (06 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்புச் செயலரின் மீது அமெரிக்கா கடும் அதிருப்தி

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது அமெரிக்கா மிகக்கடுமையான அதிருப்தியில் இருப்பதாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. ரொய்ட்டர் மற்றும் பி.பி.சி. ஊடகங்களுக்கு அண்மையில் நேர்காணல் அளித்த கோத்தபாய அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளை மிகக் கடுமையாக விமர்சனம் செய்திருந்தார்.

இந்த நேர்காணல் குறித்து அமெரிக்கா மிக வருத்தமடைந்துள்ள அதேநேரத்தில் இத்தகைய அறிக்கைகளை வெளியிடுவதில் கோத்தபாய ராஜபக்ஷ புகழ்வாய்ந்தவர் என்று பெயர் வெளியிட விரும்பாத அமெரிக்கத் தூதரக (06 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுத் தொடர்பான தகவல்கள் பிரபாகரனிடமிருந்தே வரவேண்டும்

## எரிக்கிடம் ஜனாதிபதி மகிந்த எடுத்துரைப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை பேச்சு மேசைக்கு கொண்டு வரும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு நோர்வேயின் வெளிவிவகார அபிவிருத்தி அமைச்சரும் முன்னாள் சிறப்பு சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்மிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றின் போது நோர்வேயின் வெளிவிவகார அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல் ஹெய்ம் அமைதி முயற்சிகளுக்கான நோர்வேயின் சிறப்புத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் மற்றும் நோர்வேயின் அதிகாரிகள் மூவரையும் கடந்த வாரம் சந்தித்த போது மகிந்த இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

கடந்த ஒரு வருடத்தின் பின்னர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் சொல்ஹெய்முக்குமிடையில் நடைபெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும். இச் சந்திப்பின்போது ஜனாதிபதி மகிந்த ராஜ (06 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே...**

**தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரி வினாத் தாள் ஒவ்வொரு திங்கட்கிழமையிலும் தொடர்ந்து வெளி வரும்.**

# இலங்கை விவகாரத்தை ஐ.நா.கொண்டு செல்ல இணைத் தலைமை நாடுகள் தீவிர முயற்சி

(கொழும்பு)

சர்வதேச சமூகம் யுத்தத்தை நிறுத்துமாறு விடுத்த வேண்டுகோளை இலங்கை நிராகரித்ததையடுத்து ஒஸ்லோவில் அடுத்த வாரம் கூடவுள்ள நான்கு இணைத்தலைமை நாடுகளும் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராயவுள்ளன. யுத்தத்தை நிறுத்துவதுடன் மனித உரிமைகள் மீறப்படாதிருப்பதை உறுதி செய்யும் வகையில் சர்வதேச கண்காணிப்பாளர்களை அனுமதிக்குமாறு இணைத் தலைமை நாடுகள் கோரும்என்றும் அவ்வாறில்லாத பட்சத்தில் இலங்கைக்கான மேற்குலக நாட்டு உதவிகளை ஒடுக்குவது குறித்துப் பரிசீலிக்கும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 25 ஆம் 26 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இருநாள் கூட்டத்திற்கு யப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய ஏனைய இணைத் தலைமை நாடுகளுக்கு நோர்வே அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

இது ஒரு வழமையான சந்திப்பாக இருந்த போதிலும் முக்கிய தீர்மானங்களுடன் கூடிய அறிக்கை ஒன்றை இணைத்தலைமை நாடுகள் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை நிலைவரம் மோசமடைந்து செல்லுமானால் ஒரு கட்டத்தில் இணைத் தலைமை நாடுகள் இலங்கை நிலைவரத்தை ஐ.நா.பாதுகாப்பு சபைக்குக் கொண்டு செல்லும் சாத்தியம் இருப்பதாகவும் தெரிய வருகின்றது. (ச)

# இலங்கையில் நடைபெறும் வன்முறைகளால் பிரிட்டனுக்கு நேரடியான பாதிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் மீது பிரிட்டன் எவ்வித நிர்ப்பந்தத்தையும் பிரயோகிக்கவில்லை. ஆனால் உலகமயமாக்கலின் கீழ் எந்தவொரு நாடும் தனியான தீவாக இயங்க முடியாது என இலங்கைக்கான பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் டொமினிக் சில்கொட் தெரிவித்தார். இலங்கையில் இடம்பெறும் மோதல்கள் மற்றும் வன்முறைகளால் பிரிட்டனுக்கு நேரடியான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இதன் காரணமாகவே நாம் இலங்கையின் சமாதான முயற்சிகளில் அக்கறை காட்டுகிறோம் என்றும் சில்கொட் கூறினார். இலங்கையின் சமாதான முயற்சிகளில் பிரிட்டினின் செயற்பாடுகள் என்ற தலைப்பில் சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த வெள்ளியன்று நடைபெற்ற கலந்துரையாடலில் தொடர்ந்து உரையாற்றுகையில், இனப்பிரச்சினைக்கு வன்முறைகள் மற்றும் இராணுவ ரீதியான அணுகுமுறை மூலம் எவ்வித வெற்றியையும் அடைய முடியாது. பிரிக்கப்படாத நாட்டினுள் அதிகாரங்களைப் பகிர்வதன் மூலமே இலங்கைப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். இலங்கையின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்படுவதை நாம் அனுமதிக்க மாட்டோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# அதிசயத் திகதி அடுத்த மாதம் திருமணம் செய்ய ஜோடிகள் ஆர்வம்

நூறு ஆண்டுக்கு ஒருமுறை திகதி, மாதம், ஆண்டு ஆகியவை ஒரே எண்ணில் வரும். அதேபோல அடுத்த மாதம் 7 ஆம் திகதி 07-07-07 என்று வருகின்றது. அன்று உத்தரட்டாதி நட்சத்திரத்தில் சத்தமி வருகிறது. இது திருமணம்செய்ய உகந்த நாளாக வடமாநிலங்களில் கருதப்படுகின்றது.

இந்த நாளில் திருமணம் செய்தால் ஏழு ஜென்மத்திற்கு அவர்களே ஜோடியாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையும் உள்ளது. மேலும் இந்துக்கள் 7-வது எண்ணை ராசியாகக் கருதுகின்றார்கள். திருமணத்தின் போது ஓமகுண்டத்தை 7 முறை வலம் வருகின்றார்கள்.எனவே 07-07-07 திகதியையும் ராசியாகக் கருதி அன்று ஏராளமான ஜோடிகள் திருமணம் செய்ய ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.உத்தரப் பிரதேசத்தில்தான் இந்த நாளில் திருமணம் செய்ய அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

லக்னோ நகரில் அன்று நூற்றுக்கணக்கான திருமணங்கள் நடக்கின்றன. திருமணம் மண்டபங்கள் அனைத்தும் பதிவாகி விட்டன. சில ஹோட்டல்களிலும் திருமணம் நடத்த ஏற்பாடுகளைச்செய்து வருகின் றனர்.

இது பற்றி ஐந்து நட்சத்திரக் ஹோட்டல் மேலாளர் ஒருவர் கூறும் போது, ஹோட்டலில் மண்டபம் கிடைக்காதவர்கள் புல்வெளியில் கூட திருமணத்தை நடாத்த பதிவு செய்து வருகின்றார்கள் என்றார். ஏராளமானோர் கோவில்களில் வைத்துத் திருமணம் செய்ய ஏற்பாடு செய்துள்ளனர். (ச-5)

# குடும்பஸ்தர்கள் இருவரைக் காணவில்லை என முறைப்பாடு

யாழ்.குருநகர் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர்கள் இருவரைக் காணவில்லை என யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் உறவினர்களால் முறையிடப்பட்டுள்ளது.

குருநகர் சிவில் நிர்வாகக் காரியாலய அதிகாரியின் கட்டளைக்கு அமைய அங்கு சென்று கையெழுத்திட்டு வந்த சென்றொக் குருநகரைச் சேர்ந்த அமிர்தநாதன் றொக்கி பிராங்லின் என்பவரை நேற்று முன்தினம்முதல் காணவில்லை என அவரது மனைவி மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார்.

இதேவேளை 32,தொடர்மாடி, குருநகரைச் சேர்ந்த பத்தலோமிஸ் ஜோன்ஜிம்புறவுண் என்பவரை நேற்று முதல் காணவில்லை என முறையிடப்பட்டுள்ளது. குருநகர் சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் கையெழுத்திட்டு வந்த அவர், நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் செல்வதாகக் கூறிச் சென்றவர் வீடு திரும்பவில்லை என மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. (ச)

# இராசிபலன்

18.06.2007
ஆனி 4 திங்கட்கிழமை
திருதியை காலை 6.08 வரை
பூசம் முன்னிரவு 9.26 வரை
இராகுகாலம் 7.23-8.53 மணி வரை
சுபநேரம் 11.53-1.23 மணி வரை
சதுர்த்தி விரதம்

| | |
|---|---|
| மேடம்:- | உறவினர் சந்திப்பு, நல்ல முயற்சி, மன சஞ்சலம். |
| இடபம்:- | செய்தொழில் விருத்தி, குதூகலம், தேகநலன், சகோதரர் உதவி. |
| மிதுனம்:- | உஷ்ணநிலை ,கடின வார்த்தை ,காரியதாமதம்,செலவுச் சிக்கனம். |
| கடகம்:- | கற்பனை மிகுதி,மாதர் நட்பு,தொழில் சிந்தனை , போசன நன்மை. |
| சிங்கம்:- | புத்திரரால் கவலை ,சோம்பல் நிலை , திடீர் நன்மை ,வீண் அலைச்சல். |
| கன்னி:- | தனதானிய சேர்க்கை, மாதர் நட்பு, சயனசுகம், கீர்த்தி. |
| துலாம்:- | இஷ்டசித்தி,பிறருக்கு உதவுதல்,ஆரோக்கிய நிலை ,மேன்மை. |
| விருச்சிகம்:- | உத்தியோக பங்கம்,திடீர் பயணம்,நிர்ப்பந்த நிலை ,உடல் நலக் குறைவு |
| தனுசு:- | அமைதிக் குறைவு, ரோகநிலை , காரிய தடங்கல்,பணக்குறைவு. |
| மகரம்:- | செல்வாக்கு,களஸ்திர நன்மை,முயற்சி கைகூடும்,புதியபொருள் சேர்க்கை. |
| கும்பம்:- | ஆரோக்கிய நிலை ,பகைவர் நேசம்,பொருள் சேர்க்கை ,முயற்சி பலிதம் |
| மீனம்:- | புத்திரரால் கவலை ,பூர்வபுண்ணிய கருமம்,காரிய தாமதம்,ஆரோக்கியக்குறைவு |

-வளவன்


# நல்லூர் மூத்த விநாயகர் கோவில் சித்திரத்தேர் வெள்ளோட்டம் 2007.06.18

இல்லை நிகரெனும் நல்லை நகர்நடு
அந்த மூத்த விநாயகன் தன்னருள் பெற்றவர்
தேடிவந்தேயவர் தாம்நிதி தந்தனர்
சிற்பிகள் தங்களின் கைவண்ணம் தந்தனர்
இன்று, காலை புலர்கயில் வெள்ளோட்டம்
வந்து பணிந்து வரம்பல பெற்றிட



நாயகம் என்றவன் நின்றிடுவான்
பாரினிலே பல கோடியுளர்
செய்திடும் சித்திரத் தேர் புதிதாயென்று
சித்திரத் தேரொன்று இங்கு நிமிர்ந்தது
சில நாளதிலே வரும் தேரோட்டம்
முந்தியணி செய்து வந்திடுவீர்!!!



மேற்படி ஆலயத்திற்கு யாழ்ப்பாணம் புத்தூர் ஸ்ரீகாளிகாம்பா சிற்பாலய ஸ்தபதி பிரம்மஸ்ரீ செல்லையா பாலச்சந்திரன் அவர்களினாலும் அவரது சிற்பக் குழுவினராலும் வடிவமைக்கப்பட்ட புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா 18.06.2007 இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற திருவருள் கைகூடியுள்ளதால் அத்தருணம் மெய்யடியார்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து கொண்டு, விநாயகப் பெருமானின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

## மகோற்சவ குருவின் ஆசிச் செய்தி

விநாயக அடியார்களே!

தொல்லை வினைதீர்க்கும் நல்லை மூத்த விநாயகர் சர்வ விக்கின நிவாரகராக சகல காரிய சித்தியராக நல்லூரில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மூத்த விநாயகப் பெருமானுக்கு அழகிய சிற்பத்தேர் அமைக்கப்பட்டு இன்று 18.06.2007 வெள்ளோட்டம் காணும் காட்சி மிகவும் கிடைத்தற்கரியது. இக்கைங்கர்யம் நிறைவேற உழைத்த அனைத்து அடியவர்களுக்கும் சிற்பாச்சாரியார்களுக்கும் சகல செல்வங்களும் கிடைத்து நாட்டில்சாந்தியும் சமாதானமும் நிலைத்து மாந்தர் சுபீட்சமாக வாழ எம்பெருமான் அருள் புரிய ஆசி கூறி அமைகிறேன்.

வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்

மகோற்சவ குரு
சிவாகம கிரியாதத்துவநிதி
இராம.பாலச்சந்திரக்குருக்கள்

## திருப்பணிச் சபையினரின் பிரார்த்தனைகள்

'சொல்லொணாத் துயர்நடுவே நிற்கும் எங்களிற்கு விடிவு வேண்டும்' புதிய சித்திரத்தேரில்எழுந்தருளி வரும் விநாயகப் பெருமான் நாங்கள் எதிர்கொள்ளும் துன்ப துயரங்களைப் போக்கி எங்களுக்கு நல்ல பாதை காட்ட வேண்டும் என்கின்ற பிரார்த்தனைகளை மனதில் தாங்கிய வண்ணம் இத்திருப்பணியை நாம் முன்னெடுத்திருந்தோம். இம்முறை மஹோற்சவத்தின்போது புதிய சித்திரத் தேரில் எம்பெருமான் பவனி வரவேண்டும் என்ற எங்களின் பேரவா... இன்று, முழுவடிவம் பெற்று-எழிலுருவான சித்திரத்தேராக, புதுப் பொலிவுடன் இங்கே காட்சி தருகின்றது. இன்றைய வெள்ளோட்ட நிகழ்வினைத் தொடர்ந்து தேரில் எழுந்தருளிவரவிருக்கின்ற எம்பெருமான் எங்களூர் சார்ந்த அனைவருக்கும், எங்கள் ஊர் வாசிகளாக உலகெங்கணும் பரந்துவாழுகின்ற அனைவருக்கும் வேண்டும் வரங்களை வழங்கி எல்லோரும் செழிப்புற்றுவாழ்வதற்கு அருள்பாலிக்க வேண்டும் எனவும், உலகமெலாம் சேமமுற இரட்சிக்க வேண்டும் எனவும் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

தர்மகர்த்தா சபையினரும்,
சித்திரத்தேர் திருப்பணிச் சபையினரும்.
2007.06.18

## இன்னல்கள் தீர்த்தெமைக் காத்திடவா தேரினிலே...



அல்லல் படுகின்ற எம்மினம்
படுந்துயர் கண்டு,
அவர்தம் இன்னல்கள் தீர்த்திடவே
பவனி நீ வந்திடுவாய் தேரினிலே...

வீறு கொண்டெழுந் தமிழர்
வேண்டும்வரம் தந்திடவே,
வேழ முகத்தோனே எம்மை
நாடி நீ வந்திடுவாய் தேரினிலே...

விக்கினங்கள் தீர்க்கும் விநாயகனே
விடியலைத் தேடி - அலையும் நாம்,
இறைமையுடன் மாட்சி பெற
விரைந்து நீ வந்திடுவாய் தேரினிலே...

நல்லைப் பதியுறையும் நாயகனே
மூத்த விநாயகனே ,
மூத்த தமிழ் - முறையுற வாழ்ந்திட நீ
முன்னேறி வந்திடுவாய் தேரினிலே...

புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் - உன் நாமம்
சொல்லித்தான் வாழ்கின்றோம்; புத்துணர்வு கொள்கின்றோம்,
எம்மையெல்லாம் காத்திட நீ
எழுந்தோடி வந்திடுவாய் தேரினிலே...

விழா சிறப்புற வாழ்த்துவோர்:
திரு.திருமதி மா.மனோகரன் - தாமரைச்செல்வி
(பிரான்ஸ்)

(C-173)

# இன்று ஒரு தகவல்

## நேர்மையின் வெற்றி

"வாழ்க்கையிலே வெற்றி பெற என்ன வழி?" இது ஒரு முக்கியமான கேள்வி.

இதற்கு எல்லோரும் பொதுவாகச் சொல்லும் பதில் "உழைத்தால் வெற்றி பெறலாம்" என்பதுதான். வாழ்க்கையிலே வெற்றி பெற உழைப்பு மட்டும் இருந்தால் போதாது... நேர்மையும் வேண்டும் என்கிறார் பால் ஹாப்மேன்.

இவர் யார் தெரியுமா? இவர் ஒரு பெரிய பொருளாதார நிபுணர். இரண்டாம் உலகப் போர் முடிந்த சமயம்... அப்பொழுது அவர் அமெரிக்காவின் நிதி ஆலோசகராக இருந்தார். தன் வாழ்க்கையிலே நடந்த பழைய நிகழ்ச்சி ஒன்றைச் சொன்னார். சின்ன வயதிலே அவர் படிப்பு முடிந்தவுடனே வேலை தேடிக்கொண்டிருந்தார். ஒரு கால்நடை வைத்தியரிடம் போய் வேலை கேட்டார்.

இவர் அங்கே போன சமயம் அந்தக் கால்நடை வைத்தியர் தன்னுடைய பழைய கார் ஒன்றை விற்பதற்காக ஒரு வரிடம் பேரம் பேசிக்கொண்டிருந்தார். வாங்க வந்தவர் அந்தக் காரைப் பற்றிய விபரங்களையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தார். கார் நல்ல நிலைமையிலே இருக்கிறதா என்ற சந்தேகம் அவருக்கு.

எல்லா விபரங்களையும் கேட்டுவிட்டுக் கடைசியாக அவர் சொன்னார்.

"டாக்டர் இந்தக் காரை நீங்களே என் ஊருக்கு ஓட்டிக்கொண்டு வரவேண்டும்... கார் எந்த ரிப்பேரும் ஆகாமல் என்னுடைய ஊருக்கு வந்து சேர்ந்தால்... அங்கேயே நான் பணம் கொடுத்துக் காரை வாங்கிக்கொள்ளுகிறேன்..."

தனது கார் அவ்வளவு தூரம் ரிப்பேர் இல்லாமல் போய்ச் சேருமா என்ற சந்தேகம் டாக்டருக்கு! அவர் தன்னிடம் வேலை கேட்டுவந்த பால்ஹாப்மேனை அழைத்து அவரிடம் சொன்னார்.

"இதோ பார்...! நீ இந்தக் காரை அவருடைய ஊர் வரைக்கும் நல்லபடியாக ஓட்டிக்கொண்டு போய்ச் சேர்த்து விட்டால்... உனக்கு நான் வேலை கொடுக்கிறேன்... அது மட்டுமல்ல கார் விற்ற தொகையிலே கமிஷனும் தருகிறேன் சம்மதமா?"

ஹாப்மேன் சரி எனச் சம்மதித்தார். உடனே அவரும் கார் வாங்க வந்தவரும் புறப்பட்டார்கள். இவர் மிகவும் சிரமப்பட்டு... வழியிலே எங்கேயும் நிறுத்தாமல் காரை ஓட்டிப் போய்ச் சேர்த்துவிட்டார்.

இவருடன் சென்றவர் இவரைக் கேட்டார் "இப்பொழுது சொல்... இந்தக் காரின் நிலைமை எப்படி இருக்கிறது?... நல்ல நிலையில் இருக்கிறதா?... உன் மனச்சாட்சிப்படி பதில் சொல்..."

அவரும் உடனே... கார் நல்ல நிலைமையிலே இருக்கிறது என்று சொல்வதற்காக வாயைத் திறந்தார்... அதற்குள் எதிரிலிருந்த சுவரைப் பார்த்தார். அங்கே இயேசு நாதர் படம் மாட்டப்பட்டிருந்தது... அதிலே "நீ பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் இயேசு கவனித்துக்கொண்டிருக்கிறார்..." என எழுதப்பட்டிருந்தது... அதைப் படித்தார்.

உடனே..." கார் சரியில்லை" என்கிற உண்மையைச் சொல்லிவிட்டார். இவர் இப்படிச் சொன்னதும் அவர் இவரை ஆச்சரியமாகப் பார்த்தார்.

இவருடைய நேர்மை அவரைச் சிந்திக்க வைத்தது. "உன்னுடைய நேர்மையைப் பாராட்டுகிறேன். உனக்குக் கமிஷன் கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் காரை வாங்கிக் கொள்கிறேன்" என்றார்.

அவர் மறுபடியும் சொன்னார் ..."நீ காரை ஓட்டிக்கொண்டு வரும்பொழுது உன்னுடைய திறமையைப் பார்த்தேன்... உனக்கு விருப்பமிருந்தால் என்னிடம் வேலைக்குச் சேரலாம்."

பால்ஹாப் மேன் அவரிடமே வேலைக்குச் சேர்ந்தாராம். படிப்படியாக முன்னேறினாராம்... அமெரிக்க நிதி ஆலோசகர் என்னும் அளவுக்கு வந்த பின்பும் இந்தப் பழைய சம்பவத்தை அவர் மறக்கவில்லை... அடிக்கடி சொல்வது உண்டு.

இதிலிருந்து என்ன தெரிகிறது?... வாழ்க்கையிலே முன்னுக்கு வரவேண்டுமென்றால் உழைப்பு மட்டும் போதாது... நேர்மையும் வேண்டும். இப்பொழுதெல்லாம் சிலருடைய நேர்மை நமக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது.

ஒரு புத்தகக்கடை... அங்கே ஒருவர் ரொம்ப நேரமாகத் தேடி ஒரு புத்தகத்தை எடுத்தார்... அதற்கு "பில்" போடச் சொன்னார். பில் போடுகிறவர்... "சார்... இந்தப் புத்தகம் மகா அறுவை... மகா மட்டம்... இதைவிட்டு விட்டு வேறு ஏதாவது ஒன்றைப் பாருங்கள்" என்றார்.

வாங்க வந்தவர் அவரை ஆச்சரியமாகப் பார்த்தார். "உங்கள் நேர்மையைப் பாராட்டுகிறேன்... அது சரி... இந்தப் புத்தகத்தை ஏற்கனவே நீங்கள் படித்துப் பார்த்து விட்டீர்களா?" என்று கேட்டார்...

"அதை மினக்கெட்டுப் படித்துப் பார்க்கவேண்டுமா?..." என்றார் அவர். "அப்புறம் எப்படி இது மகா மட்டம்... மகா அறுவை... என்று சொல்லுவீர்கள்?" என்றார் இவர். "இப் புத்தகத்தை எழுதியவனே நான் தான் சார்..." என்றாரே அவர்...!

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீக சொற்பொழிவு

தவசிகுளம் கண்ணகை அம்மன் ஆலய உற்சவத்தை ஒட்டி நாவலர் மணி மண்டபத்தினரால் நடத்தப்படும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில்,

நாளை 6ஆம் நாள் நிகழ்வாக "பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என்னும் தலைப்பில் சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரனும், 20ஆம் திகதி புதன்கிழமை "ஆலயங்கள் உணர்த்தும் ஆன்மீகம்" என்னும் தலைப்பில் சிதம்பரநாதன் சசீவனும் சொற்பொழிவாற்றவுள்ளனர். (அ)

## மஹோற்சவம்

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10.00 மணியளவில் துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகின்றது.

யூலை 4ஆம் திகதி புதன்கிழமை காலை 8.00 மணிக்கு இரதோற்சவமும், 5ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. தினமும் காலை 8.00 மணிக்கு வசந்தமண்டப பூசை ஆரம்பமாகும்.

## கண்காட்சி

அறவழிப் போராட்டக் குழுவினால் சிறுவர்களின் ஆக்கப்பொருள்கள் கண்காட்சி எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அறவழிப் போராட்டக் குழுத்தலைவர் வி.ஸ்ரீ சக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிற் நிறுவன மாவட்ட இணைப்பாளர் ரீ.ரீ.மயூரனும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

## மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.00மணிமுதல் சாவகச்சேரி சங்கத்தானை கந்தசுவாமி கோயிலில் குருபூசை சிறப்பாக நடைபெற உள்ளது.


இந்நிகழ்வு திருமதி கமலாதேவி குணபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. சிறப்பு நிகழ்வாக திருவாசக முற்றோதலும்,

தொடர்ந்து பாலமுருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்று இறுதியாக மகேஸ்வர, பூசையுடன் நிகழ்வு நிறைவுபெறும். (அ)

வட்டு – தெக்கணாபாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலய

மஹோற்சவம்

ஆறாம் திருவிழா



### நல்லருள் நல்கிடு தாயே

மாதர்க்கு அரசியாய்
மாநிலத்தில் இலங்கிடும்
மாதரசி கண்ணகியே
மணம் கமழும் வாழ்வுதனை
மாந்தர்க்கு ஈந்தருளி
என்றும் மங்காத ஒளியுடன்
மாநிலத்தில் வாழ்ந்திட
நல்லருள் நல்கிடு தாயே

ஸ்ரீ.சோபிகா

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



### நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

மூன்றாம் திருவிழா

### அழியா முத்தி ஆனந்தமே

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே

-அபிராமி அந்தாதி

### நயினை நர்த்தகியே...

கோயிலிடத்து உச்சியிலே -தேவி உன்
கொடியசைந்து நிற்கையிலே
நயினை ஆழியது வாயிலிலே - அம்மா
அமர்ந்த நாக பூசணியே
ஓடுகின்ற எம் உதிரம் ஒழுகுகின்ற கண்ணீரை
நாடியே சரணடைந்தோம் நர்த்தகி காத்திடுவாய்

-சுகந்தினி முருகேசு, அச்சுவேலி தெற்கு

### நாகத்தின் மீதமர்ந்து நலம் காக்கும் தாயே!

நீலக்கடலின் நித்திலமாய்
நயினைத்தீவின் இரத்தினமாய்
நாகத்தின் மீதமர்ந்து
நலம் காக்கும் தாயே
காலத்தின் கொடுமையால்
கதியிழந்து நிற்கும் நாம்
கடல் தாண்டி வருகின்றோம்
கடைக்கண்ணால் காத்திடம்மா

-ஸ்ரீபுராதனி இராஜகோபாலன், அளவையூர்

### நிம்மதியில்லா வாழ்வினை நீக்க

அடியார் நெஞ்சமெல்லாம் நிறைந்து
அருள் புரியும் அற்புத நாயகியே!
சர்ப்பத்தில் சங்கமம் கொண்டு
சங்காரம் செய்யும் சகலகலாவல்லியே
நித்தமும் ரத்தத்தில் நனைகின்ற
நின்மதியில்லாத வாழ்வினை நீக்க
உந்தன் பாதார விந்தங்களை
உருகி மனம் துதிக்கின்றோம்

கோபாலசிங்கம் சதீஸ், கரவெட்டி

### தேடி நிதம் வந்திடவே

ஆதிபராசக்தி அம்மா - உன்தன்
அருட் பொலிவு கண்டு களிக்க
தேடி நிதம் வந்திடவே - என்தன்
சிந்தையில் எண்ணம் கொண்டேன்
ஓடி நாம் வரும் வழியில் - ஓய்வில்லா
நெருக்கடிகள் நம்மை வாட்டுதம்மா
தேவி நீ கருணை செய்தால் - திருந்தியே
எம் எண்ணம் பலிக்குமம்மா

- அடியார்

### நாகம் பருந்தும் கூடி நாடித் தொழுதிடும்

நாகபூசணி அம்மா நாக பூசணி
ராக ரூபிணி எங்கள் அன்னபூரணி

நயினைச் சித்தனாம் முத்துக்குமாரனின்
உயிரும் உடலும் மாறா உள்ளமும்போற்றிய (நாக...)

நாகம் பருந்தும் கூடி நாடித் தொழுதிடும்
நாடும் அடியவர் என்றும் நயந்து போற்றிடும் (நாக...)

வாடித் தொழுதடியார் வாயார வாழ்த்திநின்று
ஆடிப் பாடிக் கூடிநின்று அன்னை அடைக்கலமென்று
கூடிக் கொலுவிருத்தி கொண்டரடிப் பணிந்து நின்று
சூடியுன் பதமலரை சரணமென்றே போற்றும் - (நாக...)

எஸ்.சிவானந்தராசா

# தரம் - 5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள் ②

பகுதி -II
நேரம் -1 மணி 15 நிமிடம்

ஆக்கம்: க. கைலநாதன்
யா/ சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை

**1. கீழே தரப்பட்ட பாடல் அடிகளைக் கொண்டு 01 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக**

**இந்த உலகில் நீங்கள்**
**இயற்றும் தொண்டில் எல்லாம்**
**தந்தை தாயைப் பேணும்**
**தருமம் ஒன்றே பெரிது**

**கன்றை நினைந்தே உள்ளம்**
**கசியும் பசுவைப் போல**
**நன்றி புரிந்தோர் தம்மை**
**நாமும் நினைக்க வேண்டும்**

பருவம் பார்த்து நாங்கள்
பயிரைச் செய்தல் போலக்
கருமந் தொடங்கும் போது
காலம் பார்க்க வேண்டும்

01) 1. நாம் இயற்றும் தொண்டில் மிகப் பெரியது எது?
2. தொண்டு என்ற கருத்தைத் தரும் சொல் ஒன்று எழுதுக?
3. உள்ளம் கசிதல் என்பதன் பொருள் யாது?
4. பெரிது என்னும் சொல்லின் எதிர்பதம் யாது?
5. இப் பாடலில் இடம்பெறும் உயர்திணை ஆண்பாற் பெயர்ச் சொல் யாது?
6. "நாம் நினைத்தோம்" என்பதை ஒருமையில் மாற்றி எழுதுக?
7. இப்பாடலில் இடம்பெறும் அஃறிணை பெண்பாற் பெயர்ச் சொல் யாது?
8. கவிஞர் கன்றை யாருக்கு ஒப்பிடுகின்றார்.
9. இங்கு இடம்பெறும் முன்னிலை, பன்மைப் பெயர்ச்சொல் யாது?
10. காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்ற கருத்தைத் தரும் பழமொழிக்கு சமமான கருத்தைத் தரும் பழமொழியை பாடலில் இருந்து எழுதுக.

**2. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துக்களை வாக்கியமாக எழுதுக.**

1. தடைப்பட்டதால் / காரணமாக / போக்குவரத்து / மழை / தாமதமானேன் / நான்

..................................................................

2. மலைக்குன்று / அழகிய / அநுராதபுரத்தில் / சிகிரியா / அமைந்துள்ளது

..................................................................

**03) மரபுத்தொடரின் கருத்தை எழுதுக**

1. கண் திறத்தல் ..............................
2. காலூன்றுதல் ..............................

**04) பின்வரும் ஒவ்வோர் வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக**

1. MAY I COME IN.......................................................
2. PLEASE CLOSE THE GATE.......................................
3. PLEASE GIVE ME A PENCIL.......................................

**05) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய கருத்தை எழுதுக**

1. තාත්තා .......................
2. කල්පාට .......................
3. මොනරා .......................

**06) கீழே சில வித்துக்களின் படங்கள் தரப்பட்டுள்ளன. அவை எவ் வித்துக்கள் என எழுதுக.**




1)........................ 2)........................ 3)........................ 4) ........................

**07) கீழே உள்ள படங்களை அவதானித்து அவை எவ்வகைத் தொழில்களுடன் தொடர்புடையன என எழுதுக.**




**08) பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**


1. பூச்சியுண்ணும் எதிரிகளிடம் இருந்து தன்னைப் பாதுகாக்க ஒளியை வெளிவிடும் பிராணி எது?
1) கரப்பான் 2) நுளம்பு 3) மின்மினிப்பூச்சி 4) மழைக்குருவி
2. காற்றின் உதவியுடன் பரவும் தாவரம்?
1) இருவேரி 2) எருக்கலை 3) தேங்காய் 4) மா
3. தரப்பட்ட மரங்களுள் ஆணிவேரற்ற மரம் எது?
1) கமுகு 2) பலா 3) வாகை 4) வேம்பு
4. பின்வரும் வீதிக் குறியீட்டில் வாகனம் செல்லத் தடையைக் குறிப்பது




5. பின்வரும் பொருட்களை நீரில் இடும் போது மிதக்கக் கூடியது?
1) கல் 2) இரும்பு ஆணி 3) றெஜிபோம் 4) குண்டூசி
6. பின்வரும் மலர் வகைகளில் கொத்துகளாகப் பூக்கும் மலர் வகை எது?
1) அலரி 2) காட்டுமல்லிகை 3) தேமா 4) சூரிகாந்தி
7. திசையறி கருவியின் முள் எப்பொழுதும் திரும்பி இருக்கும் திசை
1) வடக்கு 2) கிழக்கு 3) தெற்கு 4) மேற்கு
8. இலங்கையின் தேசிய மரத்தில் காணப்படும் மலரில் உள்ள இதழ்களின் எண்ணிக்கை
1) 3 2) 4 3) 5 4) 6
9. மூளைக்கு அதிகம் வேலையைக் கொடுக்கும் விளையாட்டு
1) டாம் 2) கரம் 3) செஸ் 4) கரப்பந்தாட்டம்
10. கம்பி அதிர்வதனால் சப்தத்தை ஏற்படுத்தும் இசைக் கருவி அல்லாதது
1) தவில் 2) சித்தார் 3) வீணை 4) வயலின்

**09) பின்வரும் உபகரணங்களின் பெயரையும் அவற்றின் பயன் பாட்டையும் எழுதுக**

அ)




1)..............................
2)..............................

ஆ)



1)..............................
2)..............................

இ)



1)..............................
2)..............................


ஈ)



1)..............................
2)..............................


**10) பின்வரும் ஒவ்வோர் வினாவிற்கும் உரிய விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக**

1. 618 முட்டைகளை 3 பெட்டிகளில் சமமாக அடுக்கினால் ஒரு பெட்டியில் உள்ள முட்டைகளின் எண்ணிக்கை யாது?..........................................
2. பி.ப 9.45 ஐ நியம நேரத்தில் எழுதினால்..........................................
3. $\frac{1}{3} + \frac{1}{6} =$
4.




இவ்வுருவின்சுற்றளவு யாது?.....................

5) கார்த்திகாயினி பாடசாலைக்கு சமூகமளித்த நேரத்தை இக்கடிகார முகம் காட்டுகிறது. அவருக்கு வீட்டிலிருந்து பாடசாலைக்கு சமூகமளிப்பதற்கு சென்ற நேரம் 15 நிமிடம் எனின் அவர் வீட்டில் இருந்து பாடசாலைக்கு புறப்பட்ட நேரம் யாது?




..............................

**11. நான் ஒரு கப்பல் செலுத்தும் மாலுமியானால் எனும் தலைப்பில் எழுவாய், பயனிலை, செயற்படுபொருளுக்கமைய நான்கு சொற்களுக்குக் குறையாமல் 6 வசனம் எழுதுக.**

## மாதிரி வினாத்தாள் – 2 பகுதி - 1 இன் விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 3 | 2) 1 | 3) 2 | 4) 2 | 5) 2 |
| 6) 1 | 7) 2 | 8) 3 | 9) 81 cm | 10) 1 |
| 11) 2 | 12) 3 | 13) 2 | 14) 2 | 15) 3 |
| 16) 1 | 17) 2 | 18) 3 | 19) 1 | 20) 3 |
| 21) 2 | 22) 3 | 23) 1 | 24) 3 | 25) 1 |
| 26) 2 | 27) 3 | 28) 3 | 29) 90/= | 30) தேயிலை பறிக்கிறார்கள் |
| 31) 2 | 32) 1 | 33) 49 | 34) 16 | 35) 4 |
| 36) 3 | 37) 3 | 38) 2 | 39) நான்முகி | 40) 400/= |

பத்து வலிமை மிக்க மனிதர்களை விட தன்னிச்சையாகச் செயற்படுபவனே மேலானவன்.

–கீழ்நாத்

வலம்புரி

# இந்தியாவின் உஷார் நிலை யாரை அதட்டுவதற்காக?

விடுதலைப்புலிகள் கட்டுநாயக்கா விமானத் தளத்தின் மீது நடத்திய விமானத் தாக்குதலையடுத்து, இந்தியா தனது படைகளை உஷார் நிலையில் வைத்துள்ளது.

தமிழகக் கடலோரத்தில் நவீன ராடர்களைப் பொருத்தியதுடன் விடுதலைப்புலிகளிடம் இருக்கக் கூடிய வான்படைத் தாக்குதல் திறன் இந்தியாவுக்கு அச்சுறுத்தலானது என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டது.

இது தொடர்பில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தமது வான்படைப் பலத்தால் இந்தியாவுக்கு எதுவித அச்சுறுத்தலும் இல்லை எனத் தெளிவுபடக் கூறியிருந்தார்.

இதனிடையே விடுதலைப்புலிகளின் விமானங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு தமக்கு விமான எதிர்ப்பு ஆயுதங்களை இந்தியா தர வேண்டும் எனவும், இந்தியா தர மறுத்தால் அவற்றைத் தாம் வேறு நாடுகளிடம் பெற்றுக் கொள்வோம் என்றும் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கே.ஆர். நாராயணன், இலங்கைக்கு விமான எதிர்ப்பு ஆயுதங்கள் எதனையும் வழங்க முடியாது என்வும் தற்பாதுகாப்பு ஆயுதங்களை மட்டுமே வழங்க முடியும் என்றும் கூறியதுடன் ,வேறு நாடுகளிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்க முடியாது எனவும் கூறியிருந்தார்.

கே.ஆர்.நாராயணனின் மேற்போந்த கூற்றினால் இலங்கை அரசியல்புலத்தில் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்ட போதிலும் இந்தியாவுடன் பகைத்துக் கொண்டு எதுவுமே செய்ய முடியாது.

குளத்தோடு கோபித்துக் கொண்டவன் கதையாக முடிந்துவிடும் என்பதால், நாராயணனின் அதட்டலை இலங்கை அடக்கமாக ஜீரணித்துக் கொண்டது.

இவை அரசியல் புலத்தில் நடந்தேற, இந்தியப் படைகள் தமிழகக் கடலோரம் உட்பட பாக்கு நீரிணையில் பெருமெடுப்பில் பாதுகாப்பு நடவடிக்கைகளை உஷார்படுத்தியுள்ளது.

விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதல் அதனைத் தொடர்ந்து வேறு நாடுகளில் ஆயுதக் கொள்வனைச் செய்வோம் என்ற இலங்கை அரசின் அறிவிப்பு என்பவற்றையடுத்து, இந்தியா பாக்குநீரிணையில் விமான எதிர்ப்பு ஆயுதங்கள், ஆளில்லா வேவு விமானங்கள், போர்க் கப்பல்கள் சகிதம் தயார் நிலையில் காத்திருக்கின்றது.

இந்தியாவின் இந்தக் காத்திருப்பு யாரை அதட்டுவதற்கானது என்பது இன்னமும் புரியாத விடயமாயினும், சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெற்றுள்ள இலங்கை இனவிவகாரத்தில் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் அதீத அக்கறை கொள்வதால் அந்நாடுகள் இலங்கையில் தமது படைகளுக்கு இருப்பிடம் தேடலாம் என இந்தியா கருதுகிறதுபோல் தெரிகின்றது.

இதனால் இத்துணை ஏற்பாட்டுடன் பாக்குநீரிணையில் படைக்கலத்துடன் பாரதப் படைகள் பவனி வருகின்றன போலும்.

# தனது பதவியிலிருந்து விலக பொலிஸ் மாஅதிபர் முயற்சி

## கடைசி நேரத்தில் கைவிடப்பட்டது

(கொழும்பு)

கொழும்பிலிருந்து தமிழ்மக்களை வெளியேற்றியது தொடர்பாக கடுமையான விமர்சனத்திற்குள்ளாகியிருந்த பொலிஸ் மாஅதிபர் விக்டர் பெரேரா பதவி விலகுவதற்கு முயற்சித்ததாகவும் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தலையீட்டினைத்தொடர்ந்து கைவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் மக்களை வெளியேற்றிய பின்னர் அரசின் தேசிய பாதுகாப்புச் சபை இந்த வாரம் கூடவில்லை. அதற்கு ஜனாதிபதியும் முப்படைகளின் பிரதமதளபதியுமான மகிந்த ராஜபக்ஷ ஜெனீ வாவுக்குச் சென்றதும் ஒரு காரணமாகும்என கூறப்படுகின்றது.

எனினும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடந்த புதன்கிழமை படைத் தளபதிகளைச் சந்தித்ததுடன் கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸ் மாஅதிபரையும் சந்தித்துள்ளார். உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் கடுமையான கண்டனங்களைத் தோற்றுவித்துள்ள கொழும்பிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றிய நடவடிக்கைக்கு கோத்தபாய ராஜபக்ஷவுடன் சேர்ந்து கடுமையான திட்டங்களை வகுத்தவரான பொலிஸ் மாஅதிபர் விக்டர் பெரேரா தனது பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பிப்பதற்கு முயன்றதாகவும் பின்னர் கோத்தபாய ராஜபக்ஷவுடனான சந்திப்பின் பின்னர் அவர் அதிலிருந்து பின்வாங்கியதாகவும் கொழும்புச்செய்திகள் தெரிவித்தன.

(ச–5)

# வேட்புமனுத் தாக்கல் செய்த அரச அலுவலர்களுக்கு மீண்டும் சேவையில் இணைந்து கொள்ள அனுமதி

## சம்பளமற்ற விடுமுறைக்கும் அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுத் தாக்கல்செய்த அரசியல் உரித்துக்களைக் கொண்டஅரச அலுவலர்களுக்கு தாபன விதிக்கோவையின்படி சம்பளமற்ற விடுமுறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வாக்கெடுப்புத் திகதியை ஒத்திவைத்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த அரச அலுவலகர்கள் மீள சேவைக்குச் சமுகமளிக்க இடமளிப்பதற்கும் சம்பளமற்ற விடுமுறைகளாக இருந்த காலத்திற்கு சம்பளம் செலுத்துவதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அமைச்சரவைத் தீர்மானத்தின்படி தற்போது சம்பளமற்ற விடுமுறையிலிருக்கும் அலுவலர்கள் இறுதியாக சேவையாற்றிய நிலையத்திற்கு 2007.06.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமுகமளித்து கடமையாற்ற இடமளித்தல் வேண்டும்.

அவர்கள் வேலைக்குச் சமுகமளிக்கும் திகதிவரை சம்பளமற்ற விடுமுறையில் இருந்த காலத்தில் சம்பளத்துடன்கூடியதாகக்கருதி சம்பள நிலுவை செலுத்தப்படல் வேண்டும் என அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி.திஸாநாயக்க சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

(ந–5)

# விருப்பத்துக்குரிய பாடங்களில் இருந்து தமிழ் இலக்கியம் நீக்கம்; மாணவர் பாதிப்பு

பாடசாலைகளில்10,11 ஆம்தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் விருப்பத்துக்குரிய பாடங்களிலிருந்து தமிழ் இலக்கிய பாடம் நீக்கப்பட்டிருப்பதால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்வி அமைச்சின் 2006.03.07 ஆம் திகதியிடப்பட்ட ED/01/12/06/15/01 என்ற இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைய 10,11 ஆம் தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தம் விருப்புக்குரிய பாடங்களாக மூன்றாவது படக் குழுவிலுள்ள சங்கீதம், சித்திரம், நடனம், நாட்டியம், தமிழ் இலக்கியம் ஆகிய ஐந்து பாடங்களில் ஏதாவது ஒரு பாடத்தைத் தெரிவு செய்யும் வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

பெரும்பாலான மாணவர்கள் தமிழ் இலக்கியத்தையே தெரிவு செய்து எந்தவித சிக்கலுமின்றி கற்று வந்தனர். தமிழ் இலக்கியத்தில் சிறந்த பெறுபேற்றினைப் பெற முடியும் என்ற நம்பிக்கையும் நிலையும் அவர்களுக்கு இருந்தது.

தமிழ் மொழி கற்கும் எந்தவொரு மாணவனும் சிறப்பாக தமிழ் அறிவு தமிழ் இலக்கியத்திற்குக் கைகொடுக்கும் என்பது அனைவருக்கும் தெரியும்.

இந்நிலையில் கல்விப் பகுதியால் புதிதாக அனுப்பப்பட்ட 2007.03.07 ஆம் திகதி கொண்ட ED/01/12/06/15/01 என்ற இலக்க சுற்றுநிருபத்தில் மூன்றாவது பாடக்குறிப்பில் உள்ள ஐந்தாவது பாடமான தமிழ் இலக்கியம் மட்டும் நீக்கப்பட்டுள்ளதாக திடீரென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மாணவர்கள் மட்டுமல்ல அவர்களின் பெற்றோர் ஆசிரியர் அனைவரும் அதிருப்தியும் அதிர்ச்சியும் அடைந்துள்ளனர். இதன் விளைவாக மாணவர்கள் சங்கீதம் , நடனம்,சித்திரம், நாட்டியம் என்பவற்றுள் ஒரு பாடத்தையே கட்டாயம் தெரிவு செய்ய வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை சங்கீதம், நடனம், நாட்டியம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் குறைந்தளவே காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ச–5)

# சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் அரிசி, மா, சீனி தாராளமாகக் கிடைக்கும்

## அரசாங்க அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் குத்தரிசி, சீனி, கோதுமை மா ஆகிய பொருள்கள் தாராளமான அளவுகளில் மாவட்ட செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

அரிசி, மா, சீனி ஆகியவற்றை ப.நோ.கூ.சங்கங்கள் மொத்தமாக விற்பனை செய்வது உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது எனவும் மக்களுக்கு அவற்றைப் பங்கிட்டு விற்பனை செய்யுமாறும் அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து எடுத்துவரப்பட்ட குத்தரிசி ஒரு கிலோக்கிராம் ரூபா 56 உம் கொழும்பிலிருந்து இந்துருவலி கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட குத்தரிசி ஒருகிலோக்கிராம் ரூபா 52 உம் ஒரு கிலோக்கிராம் சீனி ரூபா 63 உம் ஒரு கிலோ மா ரூபா 53 மான விலைகளில் பொதுமக்கள் இவற்றை தாராளமாக கொள்வனவு செய்யலாம்.

ஏதாவது ஒரு ப.நோ.கூ.சங்கங்களிலோ அல்லது அதன் கிளைகளிலோ மேற்படி பொருள்கள் விற்பனையில் இல்லை எனில் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக திட்டப் பணிப்பாளருடன் (தொ.பேசி.இல.021 222 2774) தொடர்பு கொண்டு தமது முறைப்பாட்டினைத் தெரிவிக்குமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியாவிலிருந்து றுகுணு IX கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் பொருள்களின் விற்பனை விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் விலைக்குறைப்பு நடைமுறை உடனடியாக அமுலுக்கு வருவதாக அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். விலை குறைக்கப்பட்ட பொருள் விபரம் வருமாறு,

| பொருள் | அளவு | முன்னர் நிர்ணயிக்கப்பட்ட விற்பனை விலை ரூபா | தற்போதுநிர்ணயிக்கப்பட்ட விற்பனை விலை ரூபா |
|---|---|---|---|
| சர்க்கரை | 1கி.கிராம் | 65.00 | 56.00 |
| எள்ளு (கறுப்பு) | 1கி.கிராம் | 168.00 | 115.00 |
| கடலை | 1 கி.கிராம் | 132.00 | 118.00 |
| செத்தல் மிளகாய் | 1கி.கிராம் | 174.00 | 143.00 |
| புளி | 1கி.கிராம் | 73.00 | 61.00 |
| மிளகு | 1 கி.கிராம் | 412.00 | 354.00 |

# பெற்றோரால் கைவிடப்பட்ட சிறுவன் மனித உரிமை ஆணைக்குழுவில்

பெற்றோரால் கைவிடப்பட்ட நிலையில் 10 வயதுச் சிறுவன் ஒருவர் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கே.கே.எஸ்.வீதியூடாகச் சென்ற வான் ஒன்றில் பயணம் செய்த பிரஸ்தாப சிறுவனின் தாயார், தன்னை பூநாறி மரத்தடியில் இறக்கிவிட்டுச் சென்று விட்டதாகச் சிறுவன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு நாச்சிமார் கோவிலுக்கு முன்பாக பொழுதைக் கழித்த சிறுவனை நேற்று மாலை பலாலி வீதியைச் சேர்ந்த ஒருவர் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் ஒப்படைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப சிறுவன் தனது சொந்தஇடம் குறித்து மாறுபட்ட தகவல்களைத் தெரிவித்ததாக மனிதஉரிமை ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

(ச)

## பணியாளர் இருவரின் படுகொலைக்கு
# சர்வதேச விசாரணை கோருகிறது இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்கள் படுகொலை தொடர்பாக சர்வதேச விசாரணை நடாத்தப்படவேண்டும் என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வலியுறுத்தவுள்ளது. கொழும்பில் செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட இரண்டு வாரங்கள் முடிபடைந்து விட்ட நிலையில் குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படவில்லை.

இந் நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இன்று சந்தித்துப் பேசவுள்ள செஞ்சிலுவைச் சங்கத்தினர் சர்வதேச விசாரணை அதிகாரிகள் இந்த வழக்கை விசாரிக்க வேண்டும் என்று வலியுறுத்தவுள்ளதாக தெரிகின்றது.

ஜெனீவாவில் இருந்து ஜனாதிபதி திரும்புவதற்காக நாங்கள் காத்திருக்கின்றோம். அவர் திரும்பிய பின்னர் சர்வதேச விசாரணை குறித்து விவாதிக்கவுள்ளோம் என இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் இயக்குநர் நெவில் நாணயக்கார நேற்று முன்தினம் தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் பணியாளர்களான சின்னராசா சண்முகலிங்கம் மற்றும் கார்த்திகேசு சந்திரமோகன் ஆகியோரது சடலங்கள் கடந்த 2 ஆம் திகதி இரத்தினபுரியில் கண்டெடுக்கப்பட்டன.

மட்டக்களப்புக்கு புகையிரதத்தில் செல்வதற்காக கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருவரும் காத்திருந்தபோது கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். (ச-5)

# மனித உரிமைகளை மீறிய பொலிஸாருக்கு எதிராக வழக்குத் தொடர நடவடிக்கை

மனித உரிமைகளை மீறியதாகக் கூறப்படும் சுமார் நூற்றுக்கும் அதிகமான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக வழக்குத் தொடர பொலிஸ் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. மனித உரிமைகளை மீறியதாக சுமார் 100க்கும் அதிகமான பொலிஸ் உத்தியோகத்தர்கள் குறித்து பொலிஸ் தலைமையகத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ள புகார்களையடுத்தே இந் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இப் புகார்களுக்கு எதிராக வழக்கு தொடருவதற்காக அதற்கான சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஆவணக் கோவைகளை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு பொலிஸ் திணைக்களம் கையளித்துள்ளது.

பொலிஸ் அதிகாரி தரத்தில் உள்ளவர்கள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தரத்திலுள்ளவர்கள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் போன்ற பல தரப்பட்டவர்களுக்கு எதிராக இவ்வாறு மனித உரிமை மீறல்கள் குறித்த புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ச-5)

# அமைதி முயற்சியில் நடுநிலையாளராக...

இலங்கை இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான உதவிகளை வழங்குவதற்கு ஆர்வமாக இருப்பதாக பிரித்தானியாவின் பிரதமர் ரொனி பிளேயர் தெரிவித்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது;

தனது பதவிக்காலம் முடிபுற்றதும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவிகளை புரிய ஆவலாக இருப்பதாக அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எழுதிய கடிதத்தில் பிளேயர் தெரிவித்துள்ளார்.

தற்போது அமைதி முயற்சிகளில் ஈடுபட்டு வரும் நோர்வேத் தரப்பினருடன் இணைந்து தனிப்பட்ட முறையில் தனது உதவிகளை வழங்குவதற்கு பிளேயர் முன்வந்துள்ளார்.

அவரது பதவிக்காலம் ஜூன் 27 ஆம் திகதியுடன் முடிபுக்கு வருகின்றது என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதனிடையே ரொனி பிளேயரைப் போன்று முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டனும் தனது ஆவலை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ரொனி பிளேயரின் விருப்பம் குறித்து ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் ஆராய்ந்து வருவதாகவும் கூறப்படுகின்றது. நோர்வேயின் அனுசரணையை கடுமையாக எதிர்த்து வரும் இவ் இரு கட்சிகளும், பிளேயர் நடுநிலையாளராக செயற்பட இணக்கம் தெரிவிக்கலாம் என தெரியவருகின்றது. எது எவ்வாறாயினும் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரின் விருப்பம் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தகவல் எதனையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
கடந்த வருடம் இடம்பெற்ற க.பொ.த.
சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த,
முருகையா ஜினோல்ட்

# நாட்டின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு கிழக்கில் பாதுகாப்பு அதிகரிக்கப்படும்
## அமைச்சர் ஹெகலிய கருத்து

(கொழும்பு)

இலங்கையின் வளர்ச்சியை மனதில் கொண்டு கிழக்குப் பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்படுவதாக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளின்போது சிலருக்கு அசௌகரியங்கள் ஏற்படத்தான் செய்யும் எனக்கூறி வளர்ச்சித் திட்டங்களின் போது ஏற்படக்கூடிய இடப்பெயர்வுகளை அவர் நியாயப்படுத்தினார்.

அனல் மின் நிலையம் போன்ற திட்டங்களுக்காக மூதூர் கிழக்கு மற்றும் சம்பூர் பகுதி மக்கள் தமது இருப்பிடங்களை இழக்க நேரிடுமா? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஆண்டு மூதூர் கிழக்கு மற்றும் சம்பூர்ப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் அநேகமானவர்கள் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தங்கியுள்ளனர்.

அவர்கள் மீள் குடியேற்றம் தீர்மானிக்கப்படாத நிலையில் இலங்கை அரசு இவ்வாறான நடவடிக்கையையெடுக்கவுள்ளமை அந்தப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்களிடையே ஒரு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந் நிலையில் நாட்டின் பாதுகாப்பு மற்ற எல்லாவற்றையும் விட முன்னுரிமை பெறுகின்றது எனவும் அமைச்சர் ரம்புக்வெல கூறுகிறார். நாட்டிற்கு பெருமளவில் முதலீடு வரும் நேரத்தில் நாட்டின் வளர்ச்சியை மனதில் கொண்டு சிலர் அசௌகரியப்படுவது தவிர்க்க இயலாதது எனவும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். (ச)

## பேச்சுத் தொடர்பான...

பக்ஷவும் எரிக்சொல்ஹெய்மும் பேசிய விடயங்கள் குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

விடுதலைப் புலிகளை பேச்சுமேசைக்கு மீண்டும் கொண்டு வரும் முயற்சிகளை நோர்வே தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். எனினும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது; பேச்சுக்கள் தொடர்பாகவோ அல்லது வேறு விடயங்கள் தொடர்பாகவோ எந்த முடிபுகள் வெளிவந்தாலும் அது விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் இருந்தே வரவேண்டும். அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் இருந்தோ அல்லது கடற்புலிகளின் தளபதி சூசையிடம் இருந்தோ அல்ல.

தனது அமைப்பின் சார்பில் பிரபாகரன் மட்டுமே உண்மையை பேச முடியும். அவரிடம் இருந்து எமக்கு உறுதிமொழிகள் தேவை என்றார் அவர். இச் சந்திப்பில் அமைச்சர்களான மகிந்த சமரசிங்க, ஹெகலிய ரம்புக்வெல, டக்ளஸ் தேவானந்தா, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித ஹோகன்ன ஆகியோர் பங்குபற்றினர்.

மேலும் சொல்ஹெய்முடனான தனிப்பட்ட சந்திப்பொன்றையும் மகிந்த மேற்கொண்டதாகவும் அது 15 நிமிடங்கள் வரை நீடித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## தமிழக மீனவர்களின்...

மீனவர்கள் காப்பாற்றி கரைக்கு அழைத்து வந்தனர். மீனவர் ஒருவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு ராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் குறித்து மீனவர் ஒருவர் கூறியதாவது, இரணை தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கையை சேர்ந்த 10 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் ஒரு படகில் வந்தனர். எங்களிடம் இருந்த உணவை வாங்கி சாப்பிட்டனர். நாங்கள் எதிர்பார்க்காத நேரத்தில் திடீரென படகின் மீது வெடிகுண்டுகளை வீசினர். இதில் படகு தீப்பிடித்தது.

நாங்கள் கடலில் குதித்து தப்பினோம். தீயில் எரிந்த படகு இரண்டாக பிளந்து கடலில் மூழ்கியது. எங்கள் படகின் மீது பெட்ரோல் குண்டுகளை வீசிய இலங்கை மீனவர்கள் அப் பகுதியில் மீன்பிடித்து கொண்டிருந்த மூன்று படகுகளையும் அதில் இருந்த மீனவர்களுடன் கடத்திச் சென்று விட்டனர்.

கடத்தப்பட்டவர்கள் திரும்பிவிட்டார்களா என்பது தெரியாது இவ்வாறு அவர் கூறினார். தமிழக மீனவர்கள் மீது இலங்கை மீனவர்கள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குல் குறித்து புலனாய்வுத் துறையினர் விசாரித்து வருகின்றனர். தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் தொடுப்பதில்லை என்று உத்தரவாதம் அளித்துள்ள நிலையில இலங்கை மீனவர்கள் நடத்தியுள்ள தாக்குதல் ராமேஸ்வரம் மீனவர்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக ராமேஸ்வரம் செய்திகள் தெரிவித்தன. (ச-5)

## பாதுகாப்பு செயலரின்...

அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்க அமெரிக்கா முன்வந்திருக்கும் நிலையில் அமெரிக்காவின் நடவடிக்கைகளை மிகக்கடுமையாக உயர் பொறுப்பில் உள்ள கோத்தபாய ராஜபக்ஷ விமர்சித்திருந்தார். கோத்தபாய ராஜபக்ஷவின் விமர்சனங்கள் இராணுவ உதவி தொடர்பான விவகாரங்களில் எதிரொலிக்கக்கூடும் என்றும் அமெரிக்கத் தூதரக வட்டாரங்கள்

## கைக்குண்டுத்...

மாவட்டத்தின் திருகோவில் பொலிஸ் பிரிவுக்

சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த,

- முருகையா ஜினோல்ட்
- தர்மலிங்கம் விதுரன்
- சுப்பிரமணியம் தமிழினி
- யோகராஜா பானுஜா
- தம்பித்துரை டயானா
- பாஸ்கரன் மனோஜ்

ஆகியோரை ஜனசக்தி சனசமூக நிலையத்தினரா கிய நாம் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடை கின்றோம். மேலும் இவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து வளர செல்ல விநாயகனை வேண்டி நிற்கும்,

ஜனசக்தி சனசமூக நிலையத்தினர்

(137) அரசடி வீதி, நல்லூர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றி அறிய வாய்ப்பு

அமெரிக்கா வேதாந்த சங்கம் ஸ்ரீமத் சுவாமி சேத்தானனந்தாஜி (CHETANANANDAJI) மகராஜ் அவர்களால் வெளியிடப்பட்ட DVD ராமகிருஷ்ணர் சொன்ன கதைகள், சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்து வெளியீடான ஸ்ரீ ராமகிருஷ்ணர்-

பாடசாலைகளில் காண்பிக்கக்கூடிய வகைகள்

தொடர்பு:-

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,

பருத்தித்துறை. (C-167)

ராஜபக்ஷ விமர்சித்திருந்தார். கோத்தபாய ராஜபக்ஷவின் விமர்சனங்கள் இராணுவ உதவி தொடர்பான விவகாரங்களில் எதிரொலிக்கக்கூடும் என்றும் அமெரிக்கத் தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே கோத்தபாய ராஜபக்ஷ விவகாரம் தொடர்பாக எதுவித பகிரங்க அறிக்கையும் வெளியிடுவதில்லை என்று ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது. அதே நேரத்தில் கோத்தபாய ராஜபக்ஷ நேர்காணல் குறித்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளினிடையே உள்ளக விவாதங்கள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன என்றும் கூறப்படுகிறது. மேலும் பாரிய மனித உரிமை மீறல்களுக்காக சர்வதேச நீதிமன்றத்தின் பார்வைக்கும் இந்த விவகாரம் கொண்டு செல்லப்படக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-5)

## 20 அமைச்சர்கள்...

மூத்த அமைச்சர்கள் அதிருப்தியில் இருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது. இருப்பினும் அரசாங்க அமைச்சர்கள் எதிர்க் கட்சி வரிசையில் அமரவுள்ளமை குறித்து ஐக்கிய தேசிய கட்சியுடன் கலந்துரையாடப்பட வில்லை என்று கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் ஒருவர் தெரி வித்தார். (ச)

விசேட வகுப்புக்கள்

கணக்கீடு

A/L 2008, 2009

மாணவர்களிற்கான விசேட வகுப்புக்கள்.

[உங்கள் இடங்களில் group classess அமைக்கப்படும்]

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க.

T.S.Bala

0779184121 (C-172)

தெரிவித்தனர். (ச-5)

## கைக்குண்டுத்...

மாவட்டத்தின் திருகோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காஞ்சிராங்குடா பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினரைக் கொண்ட குழு வொன்று பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் வேளையில் அவ்விடத்தில் மறைந்து நின்ற இனந்தெரியாத இளைஞர் ஒருவர் கைக்குண்டு ஒன்றினை வீசிவிட்டு தப்பிச்சென்றுள்ளார்.

இக் குண்டு வீச்சுக்கு இலக்கான இந்த உப பரிசோதகர் படுகாயமடைந்த நிலையில் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அங்கு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தினைத் தொடர்ந்து விசேட அதிரடிப்படையினர் அப் பகுதிகளில் தேடுதல் நடவடிக்கை யில் ஈடுபட்டுள்ளனர். (ச)

## ஆளில்லாத உளவு...

பெடுத்துள்ளதாக குற்றச்சாட்டுக் கள் எழுந்துள்ளன.

இந்த விமானங்கள் தொடர்பாக மேலதிக தகவல்கள் அறிய பயணம் மேற்கொண்ட பாதுகாப்புத்துறை மற்றும் வான்படை அதிகாரிகள் குழுவில் இடம் பெற்றிருந்த மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரும், பாதுகாப்புத் துறை ஆலோசகருமான முனிந்திரதாச சுகவீனம் காரணமாக இஸ்ரேலில் மரணமாகியிருந்தார். முனிந்திரதாச ஆளி லில்லாத உளவு விமானங்கள் தொடர்பான தொழில் நுட்ப நிபுணத்துவம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## விமான நிலையத்தை...

வகையிலான முப்பரிமாண ராடர் உள்ள பாதுகாப்பு சாதனங்களை அங்கு விரைவில் பொருத்தவுள்ளதாகவும் அதன் பின் னர் இரவு நேரங்களில் வழமை போல் விமான நிலையம் செயற்படும் என்றும் கூறப் படுகின்றது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் தற்போது இரவு 10 மணி முதல் அதிகாலை 5 மணிவரை மூடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

கல்லம்புரி அன்.கோ.ல் நாயனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.